STC 408/2020

Date: 11.11.2021

P.W.1

குறுக்கு விசாரணை

எந்த தேதியில் ஆய்வு உத்தரவு கொடுத்தேன் என்றால் ஆய்வு உத்தரவு கொடுக்கவில்லை. தமிழ்நாடு அரசாணையில் 149/2018 ன் படி வேலை அளிப்பவர் படிவம் 28 ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பித்திருந்தால் தோட்ட தொழிலாளர் சட்டத்தின் கீழ் தனியாக சமர்ப்பிக்க தேவையில்லை என்றால் சரியல்ல. உரிய தேதிக்குள் படிவம் 28 சமர்ப்பித்திருந்தால் தனியாக சமர்பிக்க தேவையில்லை. உரிய தேதிக்குள் படிவம் 28 வேலை அளிப்பவரால் அனுப்பப்பட்டு எனது அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளதா என்று சரிபார்த்தேன். அவ்வாறு சரிபார்த்த விவரத்தை வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தமிழ்நாடு அரசாணை எண் 151/2017 செயல்பாட்டுக்கு வரவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. தொழிலாளர் ஆணையர் அலுவலக ந.க. எண் 1/2/21304/2015, நாள் 09.08.2019 தேதியிட்ட குறிப்பாணை படி ஆய்வு மேற்கொண்டு 48 மணி நேரத்திற்குள் ஆய்வு உத்தரவு கொடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த குறைபாடுகளை 15 நாட்களுக்குள் சரி செய்ய எதிரி நிறுவனத்திற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு கொடுத்த பின்பு வாய்ப்பை பயன்படுத்த தவறும்பட்சத்தில் ஏன் நிவர்த்தி செய்யவில்லை என்று கேட்டு அதன் பிறகு குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி அனைத்து கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் உதவி ஆணையர் தோட்ட நிறுவனங்கள் ஆகியோர் உத்தரவு போட்டு அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டிய நிறுவனங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது மேலும் மேற்கண்டி அதிகாரிகள் துணை ஆய்வர், உதவி ஆய்வர் ஆகியோருக்கும் மேற்கண்ட விவரங்களை தெரிவித்து நடவடிக்கை எடுக்க அந்த குறிப்பாணை வலியுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் பின்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு அனுமதி கோரி அனுப்பப்பட்ட வழக்கு முன்மொழிவில் மேற்குறிப்பிட்ட குறிப்பாணை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது ஆய்வு சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. வழக்கு அனுமதி ஆணை உண்மையை மறைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஆய்வு மற்றும் வழக்கை

சட்டவிரோதமாக வேலை அளிப்பவர் மீது போட்டதால் நல்லெண்ண அடிப்படையிலான பாதுகாப்பு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வேலை அளிப்பவர் என் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பணியாற்றிய இடத்தில் இதுபோன்று சட்டவிரோத நடவடிக்கை எடுத்ததால் புகாரின் அடிப்படையில் கன்னியாகுமரிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல.